# மான்மின் செய்திகள்

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St., Villivakkam, Chennai - 49, India. Tel : 044-43554542, Fax : 044-26172471, E-mail : indiajoseph@gmail.com

## ஆவியாயிருக்கிற தேவனின் இருதயம் உணரப்பட்டது!

### 23 தேசங்களிலிருந்து வந்த அயல்தேச அங்கத்தினர்களுடன் மான்மின் ஆண்கள் மற்றும் பெண்கள் பணித்தளத்தின் கோடை ஏகாந்தம் 2012.





விளையாட்டு போட்டி கூட்டம்



தட்டான் பூச்சிகளை அனுபவித்தல்





அக்கினி முகாம் துதி ஆராதனை

மான்மின் ஆண்கள் மற்றும் பெண்கள் பணித்தளத்தின் கோடை ஏகாந்தம் ஜியான்புக் மாகாணம் மூஜீவில் உள்ள டியோகியுன்சன் கோடை வாசஸ்தலத்தில் நடைபெற்றது. ஆகஸ்டு 6 முதல் தொடர்ந்து இரு இரவுகள் மற்றும் மூன்று பகல்கள் திருச்சபை அங்கத்தினர்கள் ஆவியாயிருக்கிற தேவனின் இருதயத்தைக் கற்றுக்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலமாக தங்கள் விசுவாசத்தை அதிகரித்துக் கொண்டனர்.

இந்த ஏகாந்தம், அமெரிக்க ஐக்கிய தேசம், ஜெர்மனி, சீனா மற்றும் தாய்வான் போன்ற 23 தேசங்களிலிருந்தும், சீயோல், தேஜ்யான், பூசான், க்வாங் ஜீ, க்குமி, மாசான், சுன்சியான் மற்றும் ஜே ஜூ–விலிருந்தும் வந்த 300 போதகர்களும் திருச்சபை அங்கத்தினர்களும் பங்குப்பெற்ற ஒரு உலகளாவிய நிகழ்வாய் இருந்தது. குறிப்பாக, போரோ தீவு, மலேசியா மற்றும் தாய்லாந்திலிருந்து வந்த 50 காதுகேளாத விசுவாசிகள் இந்த ஏகாந்தத்தில் கலந்து கொண்டு அநேகருடைய கவனத்தை ஈர்த்தனர்.

முதல் நாள் கருத்தரங்கில், மான்மின் ஜெபமைய தலைவியான, திருமதி.போக்நிம் லீ அவர்கள் 2 கொரிந்தியர் 2:14–16ன் அடிப்படையில் "அழகான இருதயத்தை உருவாக்குதல்" என்ற தலைப்பின்கீழ், ஆவிக்குரிய இருதயத்தை அடையப்பெறுவதற்கு அவர்களது இரகசியங்களை குறித்து பேசினார்கள். ஆவியின் இருதயத்தை அடையப்பெறுவதற்கு நமக்கு வாஞ்சையும், உறுதியான தீர்மானமும், பாவம், தீமை, பொய் மற்றும் இருளை விட்டு விலகும்படிக்கான பிரயாசமும் வேண்டும் என அவர்கள் வலியுறுத்தி கூறினார்கள். கூடுதலாக, அவர்கள் நாம் நம்மை ஊக்கமான ஜெபத்தின் மூலமாக மாற்றவேண்டும் எனவும் கூறி, இந்த வளர்ச்சி கிரமத்தில் பொறுமை மிக அவசியம் எனவும் கூறினார். பின்பு அவர்கள் ஆவியில் நிறைந்த பாடல் ஆராதனையையும் ஜெபத்தையும் நடத்தினார்கள்.

கருத்தரங்கிற்கு பின்பு, ஆச்சர்யங்களை அனுபவிக்கும் நேரம் இருந்தது. தூரத்திலிருந்த வானம் மேகங்களால் நிறைந்திருந்தாலும், கருத்தரங்கு நடைப்பெற்ற இடத்தில் மேகம் விலகி வானம் தெளிவாய் காணப்பட்டபடியால் நட்சத்திரங்களைப் பார்க்க முடிந்தது. சுடுகிற நட்சத்திரங்கள் மற்றும் ஆடுகிற நட்சத்திரங்கள் மூலமாக அவருடைய அன்பை உணரச்செய்த தேவனின் அன்புக்காக யாவரும் நன்றி உணர்வடைந்தனர்.

இரண்டாம் நாள் காலையில் விளையாட்டு போட்டிக்கான கூட்டம் நடைபெற்றது. எல்லோரும் அதில் அதிக ஆர்வம் காட்டினர், காரணம் அது தான் முதல் மாபெரும் மாகாண போட்டியாய் இருந்தது. நான்கு குழுக்கள்–1வது, 2வது மற்றும் 3வது மாபெரும் மாகாணங்களும், கிளை சபைகள் மற்றும் வெளித்தேசத்தினர்களது ஐக்கிய குழுவும் தங்க பதக்கங்களுக்காக போட்டியிட்டனர்.

துவக்க விழா அறிவர்.லீ ஜேராக் அவர்களது பதிவு செய்யப்பட்ட துவக்க பிரகடனத்துடனும், ஜெபத்துடனும் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், தேர்வு செய்யப்பட்ட மாபெரும் மாகாண போதகரான போதகர்.சூஜின் லீ அவர்கள் 'முதல் பந்தை' உதைக்க கூட்டம் ஆவலுடன் ஆரம்பிக்கப்பட்டது. பத்து வித்தியாசமான விளையாட்டுகள் இருந்தன: உயரத்திலுள்ள கூடையை பந்தால் நிறைத்தல், 100மீ ஓட்டம், நீண்ட–தூர ஓட்டம், குழுவாக கயிறு தாண்டுதல், உடனடியாக பந்து உதைத்தல், கால் பந்து, கைப்பந்து, காற்று– பந்து உருட்டுதல், கயிறு இழுத்தல் மற்றும் சார்பு– தொடர் ஓட்டம். விளையாட்டு வீரர்கள் மொத்தம் 14 தங்க பதக்கங்களுக்காக போட்டியிட்டனர்.

அவர்கள் உத்வேக விளையாட்டுகளை விளையாடினர். ஒவ்வொரு குழுவின் வாஞ்சையான உற்சாக கோஷங்களும் நிகழ்ச்சியின் சந்தோஷத்திற்கு கூடுதல் சேர்த்தது. ஏழு தங்கப் பதக்கங்களை அள்ளிச்சென்ற 2வது மாபெரும் மாகாணத்திற்கு வெற்றி வாகை கோப்பை சென்றது! 2வது மாபெரும் மாகாணத்தின் கண்காணி சங்ஹீ காங் மற்றும் கண்காணியை சூயாங் சோ ஆகியோர் கூட்டத்தின் MVP–களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அன்று மாலை, கலை குழுவின் தலைவரான போதகர். ஹீஜின் லீ அவர்கள் யோவான் 4:24ல் இருந்து "ஆவி" என்ற தலைப்பின் கீழ் பிரசங்கித்தார். ஆவி தான் பிதாவாகிய தேவனுடைய இருதயம் என்று அவர் கூறினார். அது நற்குணமும் அன்புமாகவே இருக்கிறது. போதகர்.லீ அவர்கள், நாம் எவ்வளவு ஆவிக்குரிய இருதயத்தை பெற்றிருக்கிறோம் என்பதை, நம்முடைய குடும்பம், உறவினர் மற்றும் உடன் ஊழியர்களை பொறுமையுடன் எவ்வளவு புரிந்துகொள்கிறோம் என்பதை பரிசோதித்து பார்ப்பதினாலும், எவ்வளவாய் பிதாவாகிய தேவனுடைய இருதயத்தையும், அவர் நற்குணத்தையும், அவர் அன்பையும் பெற்றிருக்கிறோம் என்பதை பரிசோதிப்பதினாலும் அறிந்து கொள்ளலாம் என விளக்கினார். செய்திக்குப் பின்னர் அங்கத்தினர்கள் பாவ அறிக்கை செய்து பரிசுத்த ஆவியின் நிறைவை பெறுவதற்காக ஜெபித்தனர்.

அக்கினி முகாம் துதி ஆராதனையானது, ஆண்கள் மற்றும் பெண்கள் பணித்தளங்களின் பொதுவான வழிநடத்தும் போதகர்.ஹீசன் லீ அவர்களால் பின்தொடர்ந்து நடத்தப்பட்டது. பரலோகத்திற்கான நம்பிக்கையின் நிறைவுடன் துதிகளால் தேவனுக்கு மகிமை செலுத்தினர். பொங்கி வழிகிற உணர்வுகளுக்கு வான வேடிக்கை பட்டாசுகளும் கூடுதலாக காட்சி சேர்த்தன. சீயோல் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் மட்டுமல்லாது கொரியாவின் மற்ற பகுதிகளிலிருந்தும், அயல் தேசங்களிலிருந்தும் வந்த அங்கத்தினர்களும் தேவனுடைய அன்பில் ஒன்றாய் இணைக்கப்பட்டனர்.

அறிவர்.லீ அவர்கள் ஜெபித்ததுபோலவே, அங்கத்தினர்கள் கோடை ஏகாந்தத்தில் நல்ல குளுமையான தட்பவெப்பத்தை அனுபவித்தனர். இந்த வருடமும்கூட எண்ணற்ற தட்டான் பூச்சிகள் வந்து அங்கத்தினர்களது, முகங்கள், கைகள் மற்றும் தோள்பட்டைகள் மீது அமர்ந்து தேவனுடைய அன்பையும் பிரசன்னத்தையும் அங்கத்தினர்கள் உணரும்படிசெய்தது. பொங்கி வழியும், நன்றியுடனும், மகிழ்ச்சியுடனும், பரலோகத்திற்கான நம்பிக்கையுடனும், கோடை ஏகாந்தத்தில் மான்மினை உணர்வுகளாலும் கிருபையாலும் நிறைத்த தேவனுக்கு எல்லா நன்றிகளையும் மகிமையும் செலுத்துகிறோம்.

# ஆவிக்குரிய அன்பின் முக்கியத்துவம்

''நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கத்தரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை''
(1கொரிந்தியர் 13:1-3).

ஒன்று கொரிந்தியர் நிருபத்தின் 13ம் அதிகாரம் ''அன்பின் அதிகாரம்'' என்றழைக்கப்படுகிறது. ஆவிக்குரிய அன்பைக் குறித்த விரிவான விளக்கத்திற்கு முன்பாக அது அன்பின் முக்கியத்தை வலியுறுத்துகிறது. நமக்கு போதிய உணவு, உடை, உறைவிடம் இருப்பினும் ஒன்றிலும் குறைவுபடவில்லை என்றாலும், அன்பு நமக்கிராவிட்டால் நம்முடைய நம்பிக்கை அனைத்தும் வாழ்வதற்கான காரணமும் போய்விட்டது. வேறுவார்த்தையில், அன்புதான் நம் வாழ்வில் மிக முக்கியமான காரணி.

1கொரிந்தியர் 13:13, ''இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது'' என்று கூறுகிறது. தூதர்கள் பேசுவது போல நாம் அழகாக பேசினாலும், தீர்க்கதரிசன வரத்தை உடையவர்களானாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக விசுவாசத்தை உடையவர்களானாலும், நமக்கு உண்டான யாவற்றையும் ஏழைகளை உபசரிக்க கொடுத்தாலும் நம்முடைய சரீரங்களை சுட்டெரிக்கப்படுவதற்கு ஒப்புக்கொடுத்தாலும், நாம் நம்முடைய கிரியைகளை பூரணமாக்குவதற்கு மெய்யான அன்பு அவசியம்.

### 1.நான் மனுஷர் பாஷைகளையும், தூதர் பாஷைகளையும் பேசினாலும்,

இங்கு, ''மனுஷர் பாஷைகளையும்'' என்பது பரிசுத்த ஆவியின் வரங்களில் ஒன்றாய் இருக்கிற அந்நிய பாஷைகளை பேசும் வரத்தை குறிக்கவில்லை. ஆனால் இப்பூமியில் பயன்படும் ஆங்கிலம், சீனம், ரஷ்யம் போன்ற எல்லா மொழிகளையும் குறிக்கிறது. நாம் மனித நாகரிகம் எப்படி விருத்தியடைந்து மொழியால் வம்சா வழியினருக்கு அளிக்கப்பட்டது என்பதை பார்க்கும்போது, வார்த்தையின் மிகப்பெரிய வல்லமையை நாம் காணக்கூடும்.

மொழிகள் மனிதர்களுடைய இதயங்களை அசைக்க வல்லமை கொண்டிருக்கின்றன. ஆகவே, நாம் பல காரியங்களை அதனால் அடையமுடியும். நாம் தூதர்கள் பேசுவது போல அழகான தொனியோடு நல்ல வார்த்தைகளை கொண்டுபேசினால் அது எவ்வளவு ஆச்சர்யமாக இருக்கும்!

நாம் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு நமக்கிராவிட்டால், நாம் சத்தமிடுகிற வெண்கலம் போலவும் ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்போம். வெண்கலம் வெறுமையாய் இருக்கும்போது அல்லது மெல்லியதாக இருக்கும்போது சத்தமிடும். அதுபோல, நாம் வெறுமையாயும், ஆவிக்குரிய அன்பும் இல்லாதவர்களாய் இருக்கும்போது பதரைப் போன்றவர்களாய் இருப்போம். நாம் தேவனுடைய பிள்ளைகளாக அன்பினால் நிறைந்து அவரை வெளிப்படுத்தும்போது மட்டுமே மனுக்குலத்தை வேளாண்மை செய்த தேவனுக்கு முன்பாக நாம் கோதுமை மணிகளாக மதிப்புள்ளவர்களாய் இருப்போம். நாம் ஏதாகிலும், சொல்லும்போது, நாம் கேட்பவர்களுக்கு உயிர்கொடுக்க வேண்டும். ''நான் எப்படிப்பட்ட வார்த்தைகளால் அவனை/அவளை உற்சாகப்படுத்தலாம்?'' மற்றும் ''அவன்/அவள் சத்தியத்திற்குள் வர நான் எப்படி உதவலாம்'' என்று நினைக்கவேண்டும்.

யோவான் புத்தகம் 8ஆம் அதிகாரத்தில், சதுசேயர்களும் பரிசேயர்களும் விபச்சாரத்தில் பிடிப்பட்ட ஒரு ஸ்தீரியை இயேசுவுக்கு முன் கொண்டுவந்து அவரை நோக்கி ''இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொள்ளவேண்டும்'' என்று மோசே நியாயப்பிரமாணத்தில் தமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள்?''. ஒருவேளை அவர் அவளை கல்லெறியச் சொல்லியிருப்பாரேயானால், அவர்கள் அவரிடத்தில் அன்பு இல்லை என்றிருப்பார்கள். ஒரு வேளை, அவளை மன்னித்துவிடுங்கள் என்று அவர்களிடத்தில் சொல்லியிருப்பாரேயானால், அவர் நியாயப்பிரமாணத்தை அசட்டை செய்கிறார் என்று கூறியிருப்பார்கள். இயேசு அவர்களது பாவங்களை ஒன்றன்பின் ஒன்றாக தரையிலேயே எழுதினார். தரையிலே பட்டியலிடப்பட்ட தங்கள் பாவங்களை கண்டு அவர்கள் தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு அவ்விடத்தை விட்டுப்போனார்கள். இயேசுவும் அந்த ஸ்தீரியும் மட்டுமே அங்கு இருந்தார்கள். இயேசு அவளை நோக்கி, ''நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது இல்லை. நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே'' என்றார்.

ஆவிக்குரிய அன்பு நிறைந்த வார்த்தைகள் வாழ்வை உயிர்ப்பிக்கக்கூடிய வல்லமை நிறைந்ததாய் இருக்கின்றன. ஆனால் நீங்கள்



தலைமை போதகர் டாக்டர். ஜேராக் லீ

உங்களது வார்த்தைகள் பூர ணமாய் சரியாய் இருப்பினும்கூட உங்கள் கருத்துக்களை மற்றவர்களிடம் திணிக்கவோ அல்லது வார்த்தைகளால் மற்றவர்களது தப்பிதங்களை சுட்டி காட்டவோ முயற்சித்தால், நீங்கள் உண்மையாக அவர்களை மாற்றவோ அல்லது மெய்யான வாழ்வு கொடுக்கவோ முடியாது.

### 2.நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும்

பொதுவாக, தீர்க்கதரிசனம் என்பது வருங்காலத்தில் நடக்கப்போகிற சில காரியங்களை குறித்து பேசுதல் ஆகும். வேதாகமத்தில், சில குறிப்பிட்ட நோக்கத்திற்காக பரிசுத்த ஆவியானவருடைய உந்துதலில் தேவனுடைய இருதயத்தை பெற்றுக்கொள்வதால் சில காரியம் நடைபெறும் என்றும் மனிதர்கள் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். அது மனிதர்களுடைய விருப்பத்தினால் செய்யப்படக்கூடாது. ஆனால், மனிதர்கள் பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டினால் தேவனிடத்திலிருந்து தீர்க்கதரிசனத்தை பெற்றுக்கொள்ள முடிந்தது (2பேதுரு 1:21).

ஆனால் இங்கு, ''தீர்க்கதரிசன வரம்'' அன்பு அதிகாரத்தில் அப்பேற்பட்ட ஜனங்களுக்கு விசேஷ விதமாக கொடுக்கப்படும் வரத்தை குறிக்கவில்லை. இங்கு இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்கள் ஆகாயத்தில் ஆண்டவர் வரும்போது எடுத்துக்கொள்ளப்பட்டு அங்கு அவர்கள் ஏழு வருட கலியாண விருந்திலிருப்பார்கள். இரட்சிக்கப்படாத ஆத்துமாக்களோ ஏழு வருட கொடிய உபத்திரவ காலத்தில் பாடுபட்டு பெரிய வெள்ளை சிம்மாசன நியாயத்தீர்ப்பிற்குபின் நரகத்திற்கு போவார்கள் என்பதை முன்னறிவிப்பதை குறிக்கிறதாகும்.

இங்கு ''இரகசியங்களும்'' என்பதும் கூட ஆதியிலே மறைக்கப்பட்ட இரகசியமாகிய ''சிலுவையின் செய்தியை'' குறிக்கிறது. சிலுவையின் செய்தி மனுக்குலத்தை இரட்சிக்கும்படிக்கு ஆதியிலே ஆயத்தமாக்கப்பட்ட தேவனுடைய திட்டம் ஆகும். தேவன் மனிதன் பாவஞ்செய்து மரணத்தின் வழிக்குப் போவான் என்று முன்னறிந்திருந்தார். ஆதலால், துவக்கத்திற்கு முன்னமே நம்முடைய ஒரே பேறான இரட்சகரான இயேசுவை ஆயத்தம் செய்தார். தேவன் அதை இரகசியமாக மறைத்தார், காரணம் ஒருவேளை சாத்தான் அதைக் குறித்து அறிந்திருப்பானானால், அந்த இரகசியம் சாத்தானின் ஊடுருவலால் நிறைவேறி இருக்கமுடியாது.

எதிராளியாகிய பிசாசும், சாத்தானும், அவைகள் இயேசுவை கொலை செய்துவிட்டால் ஆதாமின் பாவத்தின் காரணமாக அவைகளுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை தாங்களே வைத்துக்கொள்ளலாம் என்று எண்ணின. ஆகவே, அவைகள் பொல்லாத மனிதர்களை தூண்டிவிட்டு அவர்கள் அவரை சிலுவையில் அறையும்படி செய்தன. அவைகளின் எதிர்ப்பார்ப்புக்கு, மாறாக, இருப்பினும், பாவமே இல்லாத இயேசுவை அவர்கள் கொலை செய்ததால் இரட்சிப்பின் வழி திறந்தது. இந்த ஆச்சர்யமான இரகசியத்தை நாம் அறிந்திருந்தாலும், நாம் ஆவிக்குரிய அன்பு இல்லாமல் அதைக்குறித்து பிரசங்கித்தால், அதினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

இதேதான் அறிவுக்கும் பொருந்தும். ''சகல அறிவும்'' என்பது கல்வி அறிவை மட்டுமல்ல. வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள சத்தியத்தின் சகல அறிவும் ஆகும். நாம் தேவனை அறிந்திருப்போமானால், அவரை சந்தித்து அனுபவிப்பதன் மூலம் நம்முடைய இருதயங்களிலிருந்து அவரை விசுவாசிக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால், நம்முடைய அறிவு வெறும் அறிவு மட்டுமே. அது மற்றவர்கள் மேல் நியாயந்தீர்க்கவும் குற்றஞ்சாட்டவும் நம்முடைய பிரமாண நியமன நிலையாக கூட செயல்படும். ஆக, ஆவிக்குரிய அன்பு இல்லாத அறிவும் பயனற்றது.

நாம் மலைகளை பேர்க்கத்தக்க ''சகலவித விசுவாசம்'' உடையவர்களாய் இருப்பினும் அன்பு இல்லாவிட்டால் நாம் ஒன்றுமில்லை. இயேசு தண்ணீரின்மேல் நடந்தபோது பேதுருவும் விசுவாசத்துடன் கொஞ்சநேரம் தண்ணீரில் நடந்தான். ஆனால் அவனுக்கு ஆவிக்குரிய அன்பு இல்லாததாலும், பரிசுத்த ஆவியை பெறாததினாலும், இன்னும் பரிசுத்தமாகாததினாலும் இறுதியாக, தன் வாழ்வில் பயமுறுத்தல்களை சந்தித்தபோது இயேசுவை மறுதலித்தான்.

நாம் தேவனை அனுபவிக்கும்போது விசுவாசம் வளரும். இருப்பினும், பாவங்களை தூக்கி எறிய கடுமையாக நாம் முயற்சிக்கும்போது மட்டுமே ஆவிக்குரிய அன்பு நம்மில் வளரும். இது விசுவாசமும் அன்பும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை அல்ல என்று அர்த்தமில்லை. விசுவாசத்தினால் தான் நாம் பாவங்களை தூக்கி எறிந்து தேவனை நேசிக்கமுடியும்.

### 3. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும்

தங்கள் ஆடம்பரத்தை வெளியில் காண்பிப்பதற்காக ஏழைகளுக்கு உதவுபவர்கள், அவர்கள் புகழப்படும்போது மிகவும் மேட்டிமையுள்ளவர்களாவார்கள். அவர்கள் தவறுதலாக தாங்கள் நீதிமான்கள் என்று நினைப்பார்கள். ஆகவே தங்கள் இருதயத்தை விருத்தசேதனம் பண்ணிக்கொள்வதற்கு முயற்சி செய்யமாட்டார்கள். அது அவர்களுக்கு கேடு. ஆனால் அன்புடன் ஏழைகளுக்கு உதவுபவர்கள் தங்கள் கிரியைகளை யாராவது அங்கீகரிக்கிறார்களா இல்லையா என்பதை பொருட்படுத்த மாட்டார்கள். காரணம், தங்களை அந்தரங்கத்தில் பார்க்கிற தேவன், தங்களது கிரியைகளுக்கு கைமாறு அளிப்பார் என்று விசுவாசிக்கிறார்கள் (மத்தேயு 6:3–4).

தியாகம் செய்வதற்கும் இது பொருந்தும். ''சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும்'' என்பது சுயத்தை முற்றிலும் தியாகம் செய்தல் ஆகும். நமக்கு அன்பு இருக்கும்போது நாம் சுய தியாகங்கள் செய்வோம் என்பது உண்மைதான். ஆனால் நமக்கு அன்பு இல்லாவிட்டாலும்கூட நாம் தியாகம் செய்யமுடியும். வேறு வார்த்தையில், உண்மையாய் வேலை செய்தபின், குறை கூறுதல் அல்லது யாரும் நம்முடைய முயற்சியை, அர்ப்பணத்தை, நேரத்தை அல்லது பொருளாதார முதலீட்டை அங்கீகரியாமல் போகும்போது நாம் அசௌகரியமாக உணருகிறோம். நாம் உண்மையாய் வேலை செய்யாத மற்றவர்களை ''அவர்கள் தேவனை நேசிக்கிறேன் என்று சொன்னாலும் எப்படி ஒன்றுமே செய்யாதவர்களாய் இருக்கமுடியும்'' என்று நினைத்து நியாயந்தீர்க்கிறோம். இப்படிப்பட்ட இருதயங்களோடு நமக்குள் நாமே சஞ்சலப்பட்டு மற்றவர்களுடனும் சமாதானத்தை உடைத்துவிடுகிறோம். ஆகவே, அத்தியாகம் நமக்கு எந்த ஆதாயத்தையும் தருவதில்லை.

நமக்கு விசுவாசம் இருந்தாலும்கூட அன்பில்லாமல் ஏன் நாம் தியாகங்களை ஏறெடுக்கிறோம்? காரணம், ''தேவனுடையது என்னுடையது என்றும் என்னுடையது தேவனுடையது என்றும்'' சொந்தம் பாராட்டும் அறிவு நமக்கு இல்லை. நம்முடைய இருதயம் ஆவிக்குரிய அன்பால் நிறைந்திருக்கும் என்றால், நாம் நம்மை யாராவது பார்க்கிறார்களா, அங்கீகரிக்கிறார்களா என்றில்லாமல் ஆண்டவருக்கு நம்மை நாமே அர்ப்பணம் செய்வோம்.

பிரியமான சகோதர சகோதரிகளே, ஒரு மெழுகு இருளை அகற்றுவதற்கும், சுற்றிலும் பிரகாசம் தருவதற்கும், தன்னையே எரித்து தியாகம் செய்வதுபோல, மற்றவர்களுக்காக கஞ்சத்தனப்படாமல் உங்களை நீங்களே தருவதின்மூலம் ஆவிக்குரிய அன்பை நீங்கள் பெறும்படியாக ஆண்டவருடைய நாமத்தினால் உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன்.

## விசுவாச அறிக்கை

1 மான்மின் மத்திய திருச்சபை, வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்டபரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2 மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது. பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3 மான்மின் மத்திய திருச்சபை, இயேசுகிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால்மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4 மான்மின் மத்திய திருச்சபை, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும்பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5 மான்மின் மத்திய திருச்சபை, உறுப்பினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடி வரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை, "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புகின்றனர்.
"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)" அப்போஸ்தலர் (17:25).
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை"
அப்போஸ்தலர் (4:12).

மான்மின் சர்வதேச பாடசாலை
இந்திய வளாகம்
Manmin International Seminary - India campus belongs to the United Holiness Church of Korea of which the chairman of the board of directors is Rev.Dr. Jaerock Lee. It is based on the fivefold Holiness gospel: Regeneration, Sanctification, Divine Healing, Resurrection, and Return of Christ.
DIPLOMA IN CHRISTIAN MINISTRY
(One year correspondance programme)
15D/41, Ponnankinaru Street, Villivakkam, Chennai - 600 049.
Tel:044-43554542, Email : indiamis@gmail.com

## விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு என்று எழுதப்பட்ட வாலிபர் வர்த்தமானம்

# ஆறாம் பணித்தளங்களின் ஐக்கிய கோடை ஏகாந்தம்
















2012 ஆகஸ்ட் 6ல், மான்மின் வாலிபர்கள் காங்ஒன் மாகாணத்தின் ஹியாங்சியாங்கில் உள்ள ஹூண்டாய் சுங்வூ கோடை வாசஸ்தலத்தில் கூடினர். வாலிபர், கல்லூரி, கானான், பவுல், மரியாள் மற்றும் வெளிச்சமும் உப்பும் பணித்தளங்களின் அங்கத்தினர்கள் நான்கு நாள் ஏகாந்தத்தில் தேவனுடைய ஆழமான அன்பை உணர்ந்து, அவர்கள் ஆவிக்குரிய இருதயங்களை அடையமுடியும் என்ற விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டார்கள். பரலோகத்தில் உள்ள சிறந்த வசிப்பிடமான புதிய எருசலேமிற்கான மாபெரும் நம்பிக்கையையும்கூட பெற்றுக்கொண்டார்கள்.

### [மாம்சம் ஒன்றுக்கும் உதவாது என்று அவர்களை உணரச் செய்த கருத்தரங்குகள்]

முதல் நாள் மற்றும் மூன்றாம் நாளில், போதகர்கள் சூஜின் லீ மற்றும் ஹிஜின் லீ அவர்கள் யோவான் 6:63லிருந்து "மாம்சமும் ஆவியும்" மற்றும் யோவான் 4:24லிருந்து "ஆவி" என்ற தனிப்பட்ட தலைப்பின்கீழ் பிரசங்கித்தனர். அவர்களது செய்திகளின் மூலமாக பங்குபெற்றோர் மாம்சம் ஒன்றுக்கும் உதவாது என்று அறிந்துணர்ந்து அங்கீகரித்து, ஆவியும் நற்குணமும் அன்புமாயிருக்கிற தேவனுடைய இருதயத்தை உணர்ந்தனர். தேவனுடைய எல்லையில்லா வல்லமையை எண்ணி அவர்கள் மிகவும் ஊக்கமாக ஆவியின் இருதயத்தை அடைவதற்கு தங்கள் மனதை நிர்ணயித்து கொண்டனர்.

### ["பரிசுத்த ஆவியின் நிறைவு"க்கான ஜெப கூட்டம் அவர்கள் ஒருங்கிணைவதற்கு அனுமதித்தது]

இரண்டாம் நாளிலே, 2கொரிந்தியர் 2:14–16ல் இருந்து எடுக்கப்பட்ட "அழகான இருதயத்தை உருவாக்குதல்" என்ற செய்தியின் மூலமாக, மான்மின் ஜெப மைய தலைவி, திருமதி.போக்நிம் லீ அவர்கள், வாஞ்சையுடனும், உறுதியான தீர்மானத்துடனும், பொறுமையுடன் தொடர்ச்சியான முயற்சிகளுடனும் ஆவியின் இருதயத்தை அடையப்பெற வேண்டுமென அவர்களை நெருக்கி ஏவினார். அவர்கள் துதிக்கையிலும் ஜெபிக்கையிலும் சிலுவையை சுமக்கையிலும் ஆண்டவருடைய அன்பை தங்கள் இருதயங்களில் செதுக்கினார்கள். முத்தான வாசல் நகலை கடப்பதின் மூலமாக, புதிய எருசலேமின் முத்தான வாசலை கடக்கும் முன்பு அவர்கள் அனுபவிக்கும் சந்தோஷத்தை உணரக்கூடிய நேரமும் அவர்களுக்கு இருந்தது. அவர்கள் முழு இருதயங்களோடும் சரீரங்களோடும் ஆவி–நிரம்பிய துதிகளை செலுத்தினார்கள்.

### [விளையாட்டு போட்டி கூட்டங்கள், அதிசய அனுபவங்களாலும் ஆண்டவருக்கு நேராக வாலிபர்களது வாஞ்சையாலும் நிறைந்திருந்தது]

விளையாட்டு போட்டி கூட்டங்களை பணித்தள போட்டிகளாக, மேகங்களால் மறைக்கப்பட்ட சூரியனுடன் குளுமையான தட்பவெட்பத்தில் விளையாடினர். அவர்களது விளையாட்டுகள் பின்வருமாறு, 100மீ ஓட்டம், சார்பு தொடர் ஓட்டம், நீண்ட தூர ஓட்டம், உயர்த்தப்பட்ட கூடைகளை பந்துகளால் நிரப்புதல், பந்து உதைத்தல் மற்றும் உற்சாக கோஷம் போட்டிகள் போன்றவையாகும். எல்லாமே மிக நெருக்கமாக தான் இருந்தது. கல்லூரி பணித்தளம் முதல் இடத்தை வென்றது. பவுல் மற்றும் மரியாள் பணித்தளம் இணைந்த ஐக்கிய பணித்தளம் இரண்டாம் இடத்தை எடுத்தது. கல்லூரி பணித்தளத்தினரான சகோதரர் தூசங் கோ மற்றும் சகோதரி சியோகி கிம் MVPகள். உற்சாக கோஷ பரிசு பவுல் மற்றும் மரியாள் பணித்தளத்தினருக்கு சென்றது. சகோதரர் ஜிம்இன் ஹான் மற்றும் கன்காணியை யுன்ஒக் பார்க் நீண்ட தூர ஓட்டத்தில் முதல் இடம்பெற்று சிறப்பு பரிசை பெற்றனர். தட்டான் பூச்சிகள் வந்து அவர்கள் சரீரத்தின் மேல் உட்காருகையில் தேவனுடைய அன்பை உணரும் மாபெரும் நேரமும் அவர்களுக்கு உண்டானது.

விளையாட்டு போட்டி கூட்டம் நீண்ட தூர ஓட்டத்தின் வெற்றியாளர் (சிறப்பு பரிசை வென்றவர்)



### "தேவனுடைய கிருபையால் தான் நான் நன்றாக ஓட முடிந்தது."

கன்காணியை யுன்ஒக் பார்க் (வேது மரியாள் பணித்தளம்)

ஒரு மாதங்களாக தானியேல் ஜெப கூடுகைக்கு பின் ஓடுவதற்கு பயிற்சி எடுத்தேன். ஜெயிப்பதின்மூலம் என் பணித்தளத்திற்கு பெலன் தரும் ஆதாரமாக மாற விரும்பினேன். விளையாட்டில் ஓடும்போது சில கஷ்ட நேரங்களை சந்தித்தேன், ஆனால் தேவனுக்கு மகிமை செலுத்த வேண்டும் என்ற என் இலக்கை நினைத்து பார்த்தேன். அவைகளை மேற்கொண்டு என் இலக்கை அடைந்தேன். இதன்மூலமாக, ஆவிக்குரிய காரியங்களையும் நான் அடையப்பெற முடியும் என்ற தன்னம்பிக்கையையும் பெறலானேன். பயிற்சியின் நேரத்தில் என்னோடுகூட இருந்து என்னை உற்சாகப்படுத்திய ஒவ்வொருவருக்கும் என் நன்றியை செலுத்துகிறேன்.

### [அக்கினி முகாம் துதி ஆராதனை, ஆண்டவருக்கு அன்பின் கடிதமாகிய துதி]

"நாம் சத்தியத்தை மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் பயிற்சி செய்வோம். நாம் உலகை மேற்கொண்டு நம்முடைய வாலிபத்தையும் இருதயத்தையும் ஆண்டவருக்கு கொடுப்போம், கர்த்தாவே, இங்கே நாங்கள் இருக்கிறோம்!" போதகர்.ஹிஜின் லீ அவர்கள் அக்கினி முகாம் துதி ஆராதனையை நடத்தினார்கள். அங்கத்தினர்கள் தங்கள் கரங்களால், கைகளால் மற்றும் விரல்களால் இருதய வடிவை ஆண்டவருக்காக உண்டாக்கினர். அவர்களது அன்பும் கிருபையும், மற்ற அங்கத்தினர்களுடன் கைகோர்த்து துதிக்கையிலும் குதிக்கையிலும் மிகப்பெரிதாய் இருந்தது. அவர்கள் ஏழு–வருட கலியாண விருந்தை சித்தரித்து, ஆண்டவரின் அழகான மணவாட்டிகளாக மாறுவதற்கு தங்கள் மனதை மாற்றி நிர்ணயித்தார்கள். இரவு நேரத்தில் வானத்தை வானவேடிக்கை பட்டாசுகள் கூடுதலாக அழகுப்படுத்தியது. அங்கத்தினர்கள் அன்பை தம் பிள்ளைகளோடு பகிர்ந்துகொள்ள விரும்பும் பிதாவாகிய தேவனின் அன்பை உணர்ந்தனர்.

# “தேவனுடைய மெய்யான சித்தத்தை போதிக்கும் வேதாகம பயிற்சி கல்லூரியை என்னால் உருவாக்க முடிந்தது”



*போதகர் தேவராஜ் இம்மானுவேல்*
*(சென்னை இந்தியாவிலுள்ள மாரநாத வேதாகம பயிற்சி நிறுவனம் மற்றும் கல்லூரியின் கலாசாலை தலைவர்).*

நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவ தாயாரால் வளர்க்கப்பட்டேன். சிறு வயதின் ஆரம்பத்திலேயே, ஆண்டவருக்காக என்னை அர்ப்பணிக்க தீர்மானித்தேன். என் தாயாரும் அதைக்குறித்து ஒரு பொருத்தனை பண்ணினார்கள், ஆனாலும் நானும்கூட அதையே செய்ய வாஞ்சித்தேன்.

திருச்சபை ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டு என் திருச்சபையின் போதகருக்கு உதவி செய்து இறையியல் படித்தேன். தொடர்ந்து ஊக்கமாக கிறிஸ்தவ கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களில் பங்குபெற்று, அநேக காரியங்களை கற்றுக் கொண்டேன்.

1993ல், ஒரு திருச்சபையை ஆரம்பித்தேன். 2003ல் மாராநாதா பூரண–கவிசேஷ திருச்சபையின் உதவி போதகராக மாறினேன், 2007ல் நான் மாராநாதா வேதாகம பயிற்சி நிறுவனம் மற்றும் கல்லூரியில் பேராசிரியராக மாறினேன். தேவன் கரிசனையோடு என்னை வழிநடத்தினார். இறையியல் பேராசிரியராகவும் போதகராகவும் என் ஊழியத்தை செய்துக்கொண்டிருக்கையில், அவருடைய வார்த்தையில் மறைந்துள்ள தேவனுடைய மெய்யான சித்தத்திற்காக தாகம் எனக்கு இருந்தது. எனக்கு, தேவன் நிச்சயமான பதிலையும், ஆசீர்வாதங்களையும் தந்தார்.

### அறிவர்.ஜேராக் லீ அவர்கள் மூலமாக சுவிசேஷத்தின் மைய கருத்தை அறிந்த பின்னர்

இந்தியாவின் மெரினா கடற்கரையில் நடத்தப்பட்ட அறிவர்.ஜேராக் லீ அவர்களின் 2002 இந்திய ஐக்கிய படைமுயற்சி கூட்டங்களை என்னால் ஒருபோதும் மறக்கமுடியாது. மாராநாதா வேதாகம பயிற்சி நிறுவனம் மற்றும் கல்லூரியின் பேராசிரியர்களும் மாணவர்களும் தன்னார்வ வேலை செய்யும்படியாக அப்படைமுயற்சி கூட்டங்களில் பங்குபெற்றனர். அப்படைமுயற்சி கூட்டங்கள் 30 இலட்சம் ஜனங்களை கவர்ந்தது. அது இந்திய கிறிஸ்தவ வரலாற்றில் ஞாபகார்த்தமான சின்னமாக குறிக்கப்பட்டது.

எண்ணற்ற ஜனங்கள் அறிவர்.ஜேராக் லீ அவர்களது செய்திகள் மற்றும் ஜெபத்தின்மூலமாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அற்புதங்களை அனுபவித்தனர். அங்கு நான் கண்ட தேவனுடைய வல்லமையான கிரியைகள் மெய்யாகவே ஆச்சரியமானது. இந்திய தேச மக்களுக்காக ஊக்கமாய் ஜெபித்த அறிவர்.லீ அவர்கள் என் உள்ளத்தை அசைத்தார். அவரைப் போன்ற ஒரு போதகராக, நான் அவரது ஜெபத்தினால் கவர்ந்து இழுக்கப்பட்டேன். அதன்பின்னதாக, மான்மின் ஊழியத்தில் ஆர்வம் மிகுந்து கொண்டு அதனுடன்கூட இணைந்து வேலைசெய்ய ஆரம்பித்தேன். இடைவெளியில், எதிர்பாராத வாய்ப்பு அளிக்கப்பட்டது.

அக்டோபர் 2009ல் இந்தியாவில் உள்ள சென்னை மான்மின் திருச்சபையின் போதகர்.ஜோசப் J. ஹான் அவர்கள் என்னை அறிவர்.லீ அவர்களது புத்தகங்களை தமிழ் மொழியில் மொழிபெயர்க்கும்படி கேட்டுக் கொண்டார். நான் அவரது சுயசரிதையான என் வாழ்வும் என் விசுவாசமும் – பாகம் 2–ஐ பெற்றுக்கொண்டேன். அது என்னை சந்தோஷப்படுத்தியது. அது நிச்சயமாக எனக்கு ஒரு பெரிய ஆசீர்வாதம்தான். புத்தகத்தை மொழிப்பெயர்க்கையில் தேவனை இன்னும் நன்கு புரிந்துகொண்டேன். அறிவர்.லீ அவர்களால் கொடுக்கப்படும் தேவனுடைய வார்த்தை என் வாழ்வை மாற்றியது. நான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டேன்.

### மாராநாதா வேதாகம பயிற்சி நிறுவனம் மற்றும் கல்லூரியில் ஒரு புதிய தரிசனத்தை பெறலானேன்.

என்னுடைய கல்லூரியில் பரிசுத்தத்தை வலியுறுத்தி சுவிசேஷத்தை பரப்ப விரும்பினேன். பிப்ரவரி மற்றும் ஏப்ரல் 2012ல், போதகர்.ஜோசப். J ஹான் அவர்களை செய்தியாளராக வைத்து கருத்தரங்குகளை ஆயத்தப்படுத்தினேன். அவருடைய பிரசங்கங்கள் அறிவர்.ஜேராக் லீ அவர்களால் பிரசங்கிக்கப்பட்ட செய்திகளான, “விசுவாசத்தின் அளவு”, “சிலுவையின் செய்தி” மற்றும் “திருச்சபையின் வளர்ச்சிக்கான திறவுகோல்கள்” போன்றவைகளாகும். அச்செய்திகள் பள்ளி நிர்வாகத்தினருக்கும் மாணவர்களுக்கும் ஆவிக்குரிய விழிப்பூணர்வை கொடுத்தது. அது மெய்யாகவே உதவியாயிருந்தது. கருத்தரங்கு ஒரு துவக்கமாக இருக்க, “சிலுவையின் செய்தி”, “விசுவாசத்தின் அளவு”, “ஜெபம்” மற்றும் “கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை (பத்து கட்டளைகள் மற்றும் லேவியராகமத்தின் புத்தகத்திலே பிரசங்கங்கள்) போன்றவை ஜீலை 2012 முதல் அதிகாரப்பூர்வமாக கலாசாலையின் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டன. பேராசிரியர்களும், மாணவர்களும் தங்களை அறிவர்.லீ அவர்களது ஆவிக்குரிய செய்திகளை கற்றுக்கொள்ள அனுமதித்ததற்காக நன்றிகளை வெளிப்படுத்தினர். அவர்கள் மேலும், அவரது செய்திகளை அதிகமாக கற்றுக் கொள்ள விரும்புகின்றனர்.

தற்போது எனது பள்ளியின் நூலகம் அறிவர்.லீ அவர்களது 24 ஆங்கில பதிப்புகளாலும் இரண்டு தமிழ் மொழி பதிப்புகளாலும் நிறைந்துள்ளது. அப்புத்தகங்கள் மாணவர்கள் தேவனுடைய வார்த்தையின் ஆவிக்குரிய கருத்துக்களை அறிந்துணர உதவியுள்ளது. எல்லாவற்றிற்கும்மேலாக, அவர்களை ஜெபிக்க செய்துள்ளது. மாராநாதா வேதாகம பயிற்சி நிறுவனம் மற்றும் கல்லூரியை புதிய தரிசனத்தினால் தேவனுடைய மெய்யான சித்தத்தை போதிக்க வழிநடத்தியதற்காக தேவனுக்கு எல்லா நன்றியையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

# “ஆண்டவருடைய அன்பின் கரிசனை ஒரு ஆச்சர்ய கச்சேரி நிகழ்வை கொடுக்க எனக்கு உதவியது”

**சகோதரி. மின்கியாங் லீ**

(1–1 கானான் பணித்தளம், நிசி இசைக்குழுவில் மரிம்பா இசைப்பவர்)

“மாஸ்கோவில் நடந்த இசை நிகழ்ச்சியில் உங்களால் விருந்தினர் தோற்றம் அளிக்கமுடிந்ததா?”

**மே மாதம் பிற்பகுதி 2012ல்,** ஒரு தொலைபேசி அழைப்பை பெற்று இறக்கை கட்டி பறக்கும் மனதுடன் சந்தோஷத்தால் துள்ளி குதித்தேன். காரணம் மற்ற நன்கு–அறிமுகமான பேராசிரியர்களுடன் நான் சேர்ந்து இசைப்பேன் என்பதால், ட்சைகேவ்ஸ்கை இசைக் கல்லூரியின், துணை இயக்குனர் கலினா, எனது நிகழ்வு பலர் முன் தோன்றுவதற்காக எனக்காக மிகவும் பரிந்துரைத்தார் என கேள்விப்பட்டேன். அவர்கள் 2011 மாஸ்கோவில் நடந்த “கொரியவை கனப்படுத்தும் மேன்மையான எதிர் காத்தை தரும் கச்சேரியாளர்களின் அழைப்பு இசைக்கச்சேரியில்” நான் இசைத்த மரிம்பா இசையை கவனித்து கேட்டிருக்கிறார்கள்.

**ஜூன் 2012ல்,** நான் துவக்க கச்சேரி நிகழ்ச்சியில் இசைக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இசை நிகழ்ச்சிக்கு முன்னதாக எனக்கு இரண்டு மாதங்கள் இருந்தன. நான் ஆரீராங் மற்றும் ரஷ்ய நாட்டுப்புற பாடலான 'பத்து லட்சம் ரோஜாக்கள்' (Million Roses) ஆகியவற்றை மரிம்பா இசையில் சரிபார்த்து முன்னேற்பாடு செய்தேன்.

**நான் போவதற்கு ஒரு வாரத்திற்கு முன்,** பெரிய அழுத்தம் என்னை போட்டு புரட்டியது. காரணம் எனது வேலை பளுவின் காரணத்தால் பயிற்சியில் என்னால் கவனம் செலுத்த முடியவில்லை. ஆனால் அறிவர்.ஜேராக் லீ என் கனவில் தோன்றி, 'நீ பெலனைப் பெற்றுக்கொண்டாய். ஆகவே நீ பெரும் வேலையை செய்வாய்' என்று என்னை உற்சாகப்படுத்தி கூறினார். எனக்கு ஒரு வாரம் மட்டுமே இருந்தது. இந்த கனவுக்கு பின்னர் சந்தோஷத்துடன் பயிற்சியில் என்னால் கவனம் செலுத்த முடிந்தது.

இசை நிகழ்ச்சி நடைபெறுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு மாஸ்கோவிற்கு வந்தடைந்தேன். கலினா அவர்கள், தனிப்பட்ட முறையில் நான் மரிம்பா பேராசிரியர் ஒருவரிடம் நாள் ஒன்றிற்கு மூன்று மணி நேரங்கள் பாடங்கள் கற்றுக்கொள்ள அனுமதித்தார்.

**ஆகஸ்டு 23, 2012** அன்று, அது இசை நிகழ்ச்சியின் நாள், அதிகாலையில் திடீரென்று சரியாக சுவாசிக்க முடியாததால் நான் வேகமாக சுவாசித்தேன் மற்றும் மயக்க உணர்வடைந்தேன். என்மேல் முழுவதும் சில்லேன்று வேர்த்துவிட்டது. நான் எனது MP3 ப்ளேயரில் பதிவு செய்துவைத்த அறிவர்.லீ அவர்களது ஜெபத்தை பெற்றுக்கொண்டு மூவான் மதுர தண்ணீரை குடித்தேன் (யாத்திராகமம் 1525). அந்நேரத்தில், என் சரீரம் சூடாகி, எனக்குள் ஏதோவொன்று இறங்கி செல்வதை உணர்ந்தேன்.

பின்னர் மயக்கம் மற்றும் வாந்தியின் அறிகுறிகள் போய்விட்டன. அவருடைய அன்பின் கரிசனைக்காக நான் ஆண்டவருக்கு நன்றி ஜெபத்தை ஏறெடுத்தேன்.

**இறுதியாக இசை நிகழ்ச்சி ஆரம்பித்தது,** என்னுடைய உடையில் அறிவர்.லீ அவர்கள் ஜெபித்ததான கைக்குட்டையை வைத்துக்கொண்டு இசைத்தேன் (அப்போஸ்தலர் 19:11–12). என்னை பார்த்துக்கொண்டிருக்கும் ஏராளமான பார்வையாளர்கள் அங்கு இருந்தனர். 'ஆரீராங்' மெல்லிசை அந்த இசையரங்கில் எதிரொலித்தது. 'பத்து லட்சம் ரோஜாக்கள்' (Million Roses) மகிழ்ச்சியின் சீரான ஒலி பின்தொடர்ந்தது. ஒவ்வொரு இசைக்குறியீடு குறியீடாக இசைக்கையில் என் உள்ளத்திலிருந்து மகிழ்ச்சி வந்தது.

நான் பெரும் கரகோஷங்களை பெற்று மேடையிலிருந்து கீழே போனேன். எனக்குக் கற்றுக்கொடுத்த பேராசிரியர் “மிக நன்று”! என்று கத்தினார். அவர் என்னை, “நான் தைரியமாக இசைத்தேன் என்றும், பாடலை எவ்வாறு இசைக்கவேண்டும் என அறிந்திருக்கிறேன் என்றும், ஆச்சர்யமான மேடை அறிவுடன் தொடர்ந்து புன்னகைத்தேன் என்றும்” பாராட்டினார். எனக்கு இப்படிப்பட்ட பாதையை திறந்து மாபெரும் அனுபவத்தை பெறவைத்து கரிசனையோடு என்னை வழிநடத்திய ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். எனக்காக ஜெபித்த அறிவர்.ஜேராக் லீ அவர்களுக்கும் எனது நன்றியை நீட்டிக்கிறேன்.



Now You can Watch
Rev. Dr. Jaerock Lee's
Program On
Arulvaakku GCN TV
@ all over Puducherry.
www.gcntv.org

MANMIN BIBLE COLLEGE
(Manmin International Seminary - India Campus)
15D/41, Ponnankinaru Street,
Villivakkam, Chennai - 600049
Tel: 044-43554542
E-mail: indiamis@gmail.com

Landmark for
Chennai Manmin
Holiness Church
15D/41, Ponnankinaru Street,
Villivakkam, Chennai - 600049
Tel: 044-43554542

